உ

சிவமயம்



தென்மாராட்சி அல்லாரை,வெள்ளாம் போக்கட்டி
இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவரும்
லண்டனை வதிவிடமாகக் கொண்டவருமான

# அமரர் திரு வேலுப்பிள்ளை ஐயாத்துரை

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# நினைவுக் கவித்தூறல் மலர்


23.07.2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு வேலுப்பிள்ளை ஐயாத்துரை

அவர்கள்



அன்னை மடியில் 10. 06. 1949

ஆண்டவன் அடியில் 23. 06. 2015

## திதிவெண்பா

ஆண்டு மன்மத அமைந்த ஆனித்திங்கள்
பூண்ட பூர்வபக்க சப்தமியில் - மாண்பு
வேலுப்பிள்ளை மைந்தன் ஐயாத்துரை ஐயன்
பூவுலகை நீத்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

மாதர்ப்பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாரடைகின்ற போது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

## திருவாசகம்

நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்தடியேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரம் கூறிவிட்டு
அத்தில் அங்கு ஒரு கூறு உன் கண் வைத்தவரக்கு
அமர் உலகு அளிக்கு நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்து அருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோளேச் சரத்தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவ னியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்தன் அருளாலே
பொருப்பரை மிகப் பொருதுவென்று மயில் மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டிக் கவசம்

## காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

## வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் -நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள்கந்தூ
சஷ்டிக் கவசந்தனை

## நூல்

சஷ்டியை நோக்கச் சரணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நாலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழுந் தாளும்
திருவடி யதனில் சிம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகென நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்த துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச்செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பரவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியம்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைகள் என்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செலிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புங் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடலவிப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை வருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
காரத்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வெல் முருகா!
பழுநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழிகிய வேலா!
செந்தில்மா மலையுறம் செய்கல்வ ராயா!
சமரா பரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினர் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியென் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற வாழ்க!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனனென் மீதுன் மனமகிழ்ந்த தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஒதிய செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியம்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வார்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியெ போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தாற் கரையுண்ட கண்ணியர் ஐயாத்துரையின் கோலமுறு நினைவுத் தடங்கள்!

இந்துமா கடலின் இனிய முத்தாகும்
இலங்கையாம் திருநாடு
முந்துமா சிரமென முடிவிலாப் புகழ்கொள்
முகிழ் புகழ் யாழ்ப்பாணம்
செந்தமிழ் கொஞ்சும் தென்னை, மா, பனைகள்
சோலைகள், சூழ் தென்மராட்சி,
அந்த மாநகரில் அழகுறு கிராமம்
அணிதிகழ் வெள்ளாம்போக்கட்டி
இந்த நற்தலத்தில் இனிய ஐயாத்துரை
இறையருள் பொலிந்திடப் பிறந்தார்!

விந்தை கொள் வேலுப் பிள்ளையாம் செல்வர்
விரும்புறு கணேஸ்வரி நங்கை
முந்துறு தவத்தால் முதல் மகன் என்றே
முழுநிலா இவரவ தரித்தார்

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பது
அரியநல் யூன்மாதம் பத்தாம் தேதி
மேயினிய செம்மலவர் மண்ணில் உதித்து
மேன்மை பல பெற்றுயர்ந்த கதையை சொல்வோம்

கனகாம் பிகை, மகேசன், பரா சக்தி
கருத்தில் நிறை சகோதரர் என்றே சூழ
இனம் சூழ குலம் வாழ இளவல் இவரும்
எழு பருதி எனவளர்ந்து ஏற்றம் கண்டார்

சாவகச்சேரி இந்தக் கல்லூரி
சால்புறு உயர்கலை கற்றுத் தேறினர்
அணியுறு அறுபத் தெட்டாம் ஆண்டிலே
அருமையாம் கொழும்பு, பல்கலைக்கழகம்
தணிவரும் கல்விச் செல்வர் இவரையும்
தன்கண் வாங்கி தரம் உயர்த்தியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகப் பட்டம் வென்றனர்
பகரும் ஐயாத்துரை எழுச்சி பெற்றனர்
வவுனியா அரச செயலகம் தன்னிலே
எழுது வினையராய் பதவியும் ஈட்டினர்

மத்திய இலங்கை மலை வளம் சூழ்ந்த
மனாங்கவர் மண்ணில் ஹற்றனாம் பூமி
தொழில் நீதி மன்றினில் முதலியார் எனவே
ஐயாத்துரையரை உள்வாங்கி மகிழ்ந்தது

கல்வியில் உயர்ந்து கண்ணியம் பெற்று
நல்லதாம் பதவி பட்டங்கள் உற்று
இளைஞனாய் நின்ற ஏந்தல் ஐயாத்துரை
இல்லற வாழ்வில் இனிதே நுழைந்தனர்

சாவகச்சேரி சரசாலை மண் வாழ்
சால்பினர் கந்த சாமியும் மனையாள்
திருப்பதி யம்மா என்னும் தையலும்
செய்தவத்தால் வரும் சிரேஸ்ட புத்திரி
மகேஸ்வரி என்னும் மனங்கவர் நாயகி
மனைவிளக்காக வாய்த்தனர் இவர்க்கே!

இல்லறத்தை நல்லறமாய் ஆக்கி நின்று
இறைபக்தி இனிய தவம் தான தர்மம்
வல்லமைகள் சூழந்திடவே வாழ்ந்த அண்ணல்
வாழ்வுயர "இங்கிலாந்து" தேசம் வந்தார்!

தொண்ணூற்று இரண்டென்னும் ஆண்டு தன்னில்
துணைவியோடு இங்கிலாந்து வந்து வாழ்ந்து
தன்னவளும் கைகொடுத்த தொழிலும் பெற்று
தான் வாழ்ந்து உறுதுணைகள் யார்க்கும் செய்தார்

ஊர் வாழும் உறவுகட்கும் துணையாய் ஆனார்
உறுகோயிற் பணிபலவும் ஆற்றி நின்றார்
பேர் பெற்ற சமூக சேவை பலவும் செய்தார்
பகவானால் அருள்கொடையாய் மகவும் பெற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமகள் "தாரகா" தன்னைப் பெற்று
தகுதி பல அவளுக்கு ஈந்து தங்கள்
குலம் விளங்கக் கடமைகளை ஆற்றி நின்றார்
குலமகளின் உயர்வுகளும் கண்டே மகிழ்ந்தார்

இரண்டாயிரத்து பத்தென்னும் ஆண்டு தன்னில்
இலங்கை வந்து உறவுகளை கண்டு மகிழ்ந்து
தரமுயர்ந்த தாய்மண்ணை வணங்கி மீண்டார்
தக்கபல உறவோடு லண்டன் வாழ்ந்தார்

காலநதி தரிக்காமல் பாய்ந்தே செல்லும்
காலனவன் தன்கடமை மறத்தல் இல்லை
நோயாலே எம் அண்ணல் வீழ்ந்தார் - லண்டன்
மண்ணதிலே பணிமுடித்து தெய்வம் ஆனார்!

இன்றோடு அன்னவரின் உடலம் போகும்
அருந் தீயில் அவருடைய தேகம் வேகும்!
தொன்றுதொடு இயற்கையை நாம் மாற்றலாமோ?
தூயவரின் நினைவுகளை மனதில் வைப்போம்!

அண்ணலின் ஆத்ம சாந்திக்கு
அனைவரும் அஞ்சலிப் போம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வேலுப்பிள்ளை ஐயாத்துரை அவர்களின் பிரிவாற் துயருறும் பாச உள்ளங்களின்

# சோகச் சுழல்

## மனைவியின் மனத்துயர்

ஆருயிராய் நின்றவரே அருந்தவத்தால் நான்பெற்ற
அன்புறுநற் திருநாதா அகம்நெகிழப் போனீரோ?
ஓருயிராய் நாம் இணைந்து வாழ்ந்திருந்த கதைமறந்து
ஓங்கும் துயரீந்து ஓடியெங்கே சென்றீர்கள்
ஊருவிட்டு ஊருவந்து உமையிழந்து தனிமையிலே
உருகியழ வைத்தின்று தெய்வமென உயர்ந்தீரோ?
கருணையுறு கடவுள்தான் கடிதமர்ந்து நீர்சுகிக்கி
கண்ணீரால் அஞ்சலித்தேன் காவலரே அமைதிகொள்க!

## ஏகமகளின் இதயக் குமுறல்

எப்போதும் என் நினைவை ஏந்திநின்ற அப்பாவே
என்றென்றும் என் உயர்வை இதயத்தில் சுமந்தவரே!
இப்போ நான் உமையிழந்து இடருற்று வாடவைத்து
எங்கேதான் சென்றீரோ இனியார் எனக்குண்டு
முப்பொழுதும் உம்முகத்தில் முறுவல்கண் டின்புற்றேன்
முடியா நெடும்பயணம் முறையோ ஏன் பிரிந்தீர்கள்?
ஒப்பில்லா உறவே என் உயிரே அப்பாஉம்
உயர் வழியில் தொடர்வேன் உம்மாசி நல்கிடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறந்தார் உருகல்

அண்ணன் எனவானீர
அணி செய்தீர் எம் வாழ்வை
திண்மையுற ஆக்கிவைத்து
திறன்கள் பல ஈந்தீர்
கண்ணிற் கரு மணியே எம்
கலையமுதே அண்ணா நீர்
எண்ணாது எங்குற்றீர்
இதயம் பதறினமே!
மண்ணில் உம் திரு நாமம்
மனதிருத்தி அஞ்சலித்தோம்!
வண்ணமுறு இறை பாதம்
வல்லவரே அமைதி கொள்க!

## மைத்துனர் மனத்தவிப்பு

வாழ்வாங்கு வையகத்தில் வாழ்ந்தீர் நாளும்
வண்மை பல ஆற்றியே உயர்ந்தீர் ஐயா
நாள்நாளும் நமக்குமைத் துனரேயாகி
நம்முள்ளத் திருந்தவரே நலமே மச்சான்
ஊழ்வலியால் உமையிழந்து தவிக்கின்றொமே
உணர்வுகளும் கலங்கி மனம் பதறினோமே
தாள் பணிந்து உமக்காக வணங்கி நின்று
தயவுடனே பணிகின்றோம் தமிழாய் வாழி!

## மருமக்கள் மனவேதனை

உள்ளமெலாம் நிறைந்த மாமா!
உயர்வுகளை ஈந்த மாமா!
வள்ளலென நின்றெமக்கு
வல்லமைகள் தந்த மாமா!
கள்ளமிலாப் புன்சிரிப்பும்
கருத்தினிலே பாசமுமாய்
அள்ளியெமை அன்பு செய்த
அருளாளர் போனாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளமெனக் கண்ணீராய்
விதிர்த்து நாம் வாடி
உள்ளத்தால் தொழுகின்றோம்
உத்தமரே சாந்தி கொள்க

## உற்றார், உறவினர் நண்பர்கள்

உறவுக்குக் கைகொடுத்த
உத்தமரே போனீரோ?
ஊர்தன்னை நேசித்த
உயர்வினரே போனீரோ?
இறப்பென்னும் கொடுமையது
இன்றும்மைப் பிரித்ததுவோ?
இறைவனவன் திருப்பாதம்
இன்பமுறச் சென்றீரோ?
நிறைவான உம் பெருமை
நெஞ்சத்தில் நாம் சுமந்து
நிலையான உம் ஆத்மா
சாந்தியுறப் பணிந்தோமே!

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "A MEMORIAL FOR MY DAD"

On July 5th 2015, I attended my Father's funeral. I never in a million years expected to be saying goodbye to my Dad at 66 years old, especially that sudden. Thinking back to the day of the funeral stirs a lot of painful emotions in me, more so because it saddens me to think I will never get the opportunity to share the memories I am yet to see with him. But I am lucky to have had 20 years worth of fond memories which without a doubt will last me a lifetime.
Dad never failed to make me laugh, throughout my childhood, teens and into the start of my years as a young adult. I will never forget the times when he used to carry me on his back or take me to feed the ducks as a child. Even then, Dad seemed like an invincible figure and the thought of him passing seemed scarcely credible.

I'm incredibly lucky to have had such an inspirational father who taught me the best things in life. He gave me my tenacious appetite, strong will and most of all my determination to see everything through.

Though at the time I never realised, he worked incredibly hard to sustain a comfortable lifestyle for both my mum and I to the extent that he dismissed his health. It saddens me to think his passing could of been preventable, but unfortunately life sits in the hands of fate. Most importantly, I know the last thing my dad would of wanted is for me, or in fact anyone, to live their life antagonising over his death. For that, I aim to live every day like it's my last in order to make his dreams come true.

Words cannot explain how much I'll miss you over these years, dad though at the time it seems like an obscure dream. I know you'll always look out for me and put me straight, just like you have done all these years. We will meet one day, I'm sure of that but until then sleep well, my guardian angel. I will make you proud.

**Loving Daughter**

***Tharagah***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரனடி அடைந்த அண்ணனை அனுதினம் போற்றுவோம்

சகோதரர்கள்

அண்ணனாய் வந்து வாய்த்து
எங்கள் குடும்பங்கள் வாழ
திண்ணமாய் உழைத்து வழிகாட்டி
திசை போற்ற வாழ்ந்த தெய்வம் நீங்கள்!

அண்ணனாய் அரிய மைத்துனனாய்
ஆன எம் குழந்தைகட்கு
வண்ணமுறு மாமாவாய் நீங்கள் விளங்கி
வல்லமைகள் ஈந்தீர்கள் மறப்போமோ நாம்

புன்னகை பூக்கும் திரு வதனம்
பொன்னென உதிர்க்கும் நற்பேச்சு
தன்னலம் இல்லாத தயவு மனம்
என்றைக்கு இனி நாம் கண்டிடுவோம்!

இளமை முதலாக நாம் எல்லோரும் வாழ
இடர்கள் பல சுமந்த ஏந்தல் நீர்
உளத்தில் உறுதியோடு தியாகச் சிலுவை சுமந்த
எங்கள் உறவே! உம்மை மறப்போமா?

இங்கே இலங்கையில் இருந்து
எண்ணி எண்ணி அழுவதை விட
எதுவும் முடியாமல் கை குவித்தோம்1
எங்கள் மீட்பரே கண்ணீர் சொரிந்தோம்!

இறுதிக் கணத்திற் கூட உங்கள்
இனிய முகத்தை தரிசிக்க முடியாமல்
உறுதி இழந்து இங்கே பதைக்கிறோம்
உம் நிழற் படத்தை வைத்து அஞ்சலித்தோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் பாதை யெல்லாம் புது மலர்கள் பூக்கட்டும்
செல்லும் வழி எங்கும் புது வசந்தரம் வீசட்டும்
அல்லல் நீங்கி அரனார் திருவடியில்
உங்கள் உயர் ஆத்மா அமைதி கொள்ளட்டும்
மலர் பொழிந்து மாலை சூட்டி எம் மன்னரே
இறுதி விடை கொடுக்கின்றோம்! உங்கள் பெயர் வாழ்க!
நீங்கள் பொறித்த புகழ் வாழ்க!

மூலமாய், முற்றுமாகி, முனைப்புறு அண்ணனாகி
ஞாலமாய் எங்கள் வாழ்வில் தெய்வமாகி
காலனார் வலையில் வீழ்ந்த கடமையின் உருவே உங்கள்.
கோலமார் பாதம் நாளும் தொழுது வாழ்வோம் !

உங்கள் உயர்ந்த ஆத்மா
எல்லாம் வல்ல இறையடியில்
மாங்கா மகிமையொடு சாந்தி கொள்ள
மனத்தால் அஞ்சலித்தோம் அண்ணா வாழ்க!

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்...... அமரர் வே.ஐயாத்துரை

ஒரு பொறுப்புள்ள குடும்பத்தலைவனாகவும் அன்புமிக்க கணவனாகவும், பாசமுள்ள தந்தையாகவும் சகோதரனாகவும் எல்லோர் மனதிலும் அன்பையே விதைத்து வாழ்ந்த "எம் ஐயாத்துரை" இன்று எம்மிடம் இல்லையே என்பதை மனம் நம்ப மறுக்கிறது. அவர் இயற்கை எய்திய செய்திகேட்டு எல்லோரினதும் அதிர்ச்சியும் மனவேதனையும் விபரிக்க முடியாதது.

எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே ஒன்றாக ஒரு குடும்பபிள்ளையாக வளர்ந்து எம் எல்லோரினதும் பாசத்தைப்பெற்று வளர்ந்தவர். அவர் பிறந்த காலத்தில் தாய் மண்ணான கச்சாய் ஒரு சிறிய கிராமமாக இருந்தபோதிலும் தனது கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பயின்று சர்வகலாசாலை சென்று தமது பிறந்த மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்து தந்தவர்.

திரு.ஐயாத்துரை அவர்கள் இடர்களைக்கண்டு அஞ்சுவதில்லை. ஆனால் சவாலாக ஏற்றுக் கொள்பவர். வேலைத்தளங்களில் என்ன, வைபவங்களில் என்ன அவரைச்சுற்றி நம்பிக்கை மிக்க நண்பர்களும் உறவினர்களும் என்றும் கூடவே இருப்பார்கள். புலம்பெயர்ந்த மண்ணிலும் அவர் எதிர்கொண்ட சவால்களை வெற்றி கொண்டு, தான் சிறிதளவேனும் மாறாமல் என்றும்போல் இருந்த அதே நல்ல குணாதியங்களுடனேயே வாழ்ந்து வந்தவர்.

அமரர் ஐயாத்துரை கடவுள் பக்தி உள்ளவர். ஆனால் கோயில்கள், குளங்கள் என்று பெரிதாக அலைந்ததில்லை. ஆனால் அன்புதான் அவரது சமயநெறி. இயல்பாகவே எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர். அவரது வசீகர தோற்றத்தாலும் என்றும் மலர்ந்திருக்கும் புன்சிரிப்பாலும் எல்லோர் மனதிலும் நிறைந்து இருந்தவர்.

நான் கடைசியாக மருத்துவமனையில் அவரை பார்த்தபோதும் 55 ஆண்டுகளுக்கு முன் என்னுடன் எப்படி பாசமுடன் பேசினாரோ அதேபோலவே அளவளாவி விடைபெற்று சென்றார். அவரது ஆழமான அன்பும், பாசமுள்ள புன்சிரிப்பும் என்றும் எம்மனதில் பசுமரத்து ஆணிபோல புதைந்து இருக்கும்!
அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்!!

டாக்டர்.என்.சிவயோகநாதன் (மைத்துனர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் நிறைந்த எம்
# மாண்புறு மாமா!

–மருமக்கள்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தவர் எங்கள்
எண்ணங்களில் என்றும் நிறைந்தவர்
கண்ணிற் கருமணியாய்க் காத்தவர் - மாமா
விண்ணின் விளக்கெனவே உயர்ந்தனர்!

அன்பு மனை அருகிருக்க அருமை மகள் உருகியழ
என்புருகிச் சோதரர்கள் இலங்கையிலே பரிதவிக்க
மன்னுபுகழ் மருகர்கள் மைத்துனர்கள் சுற்றத்தார்
உன்னி உன்னி உருகியழ உத்தமர் தான் போனாரோ?

நையா தெமைப் புரந்த ஐயாத்துரை என்னும்
கையாற் கொடையளந்த கண்ணியரும் போனாரோ?
மாமா என நாங்கள் மனதாரத் துதி செய்த
நாமா வழியினர் தான் நாமலறப் போனாரோ?

அம்மாவின் அண்ணனாய் அருங்குணத்தின் தீபனாய்
இம்மா நிலத்துயர்ந்த இனியவராய் - நம்மவரின்
நலம்நாடி வாழ்ந்தார் நமக்கெல்லாம் துணையானார்
பலமிழந்தோம் துணையிழந்தோம் நாம்!

காலன் தன் தொழில் செய்தான்
கடவுளும் பலம் இழந்தான்
ஞாலம் உமையிழந்து தவிக்கிறது - மாமா நீர்
காட்டிய வைத்த நல்லனவாம்
கடமை வழி நாம் தொடர்வோம்
கோலமுறு இறைபதம் நீர் வாழ்க!

உங்கள் அன்பு முகம் என்றும் எம் மனம் வாழும்
ஏற்ற மிகு உம் புகழ்தான் ஊரில் சூழும்
எங்கள் கால்த்தடங்கள் என்றும் உம் வழி பதியும்
எல்லோரும் உமக்காக அஞ்சலித்தோம்!
ஏற்றமிகு இறைபாதம் என்றென்றும் உம் ஆத்மா
இன்பமுற மலர் சொரிந்து வாழ்த்துகின்றோம்!
மாமா பெயர் வாழ்க! மன்னரவர் புகழ் வாழ்க!
மாநிலந்தான் உள்ளவரை நாம் வாழ்க!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"மறவற்க மாசற்றார் கேண்மை
துறவற்கு துன்பத்துள் துப்பாயர் நட்பு;

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடனே ஓடிவந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைவருக்கும், மற்றும் தொலைபேசி வாயிலாகவும் வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பூக்கள், பூமாலைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும், மறைவு செய்தி கேட்ட நாளில் இருந்து இன்றுவரை பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மேலும் இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் கலந்துகொண்டு எமது குடும்ப தலைவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் மேற்படி கிரியைகளை செவ்வனே நடாத்தி தந்த குருமார்கள், இந்நினைவு மலர் ஆக்கத்திலும் அச்சுப்பதிவிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

குடும்பத்தினர்
சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

ஆற்றின் வழிசெல்லும் அகல்ஓம் போலங்கு
அருவிதியின் வழியினிலே நம்பயணம் இயல்பு இது!
ஆற்றும் நல்லறங்கள் அழியா — அழிவு அது
ஆருயிருக் கில்லை — உடம்பு நிலைப்பதில்லை
ஏற்றமிகு ஐயாத் துரைநாம் அழியாது
என்றும் நம்நெஞ்சில் பதியும் ஐயமில்லை
தேற்றுவொம் மனங்கள் - தெய்வ ஆசியை எம்
திருவாளன் பெற்றுய்ய வணங்கி அமைதி கொள்வோம்

ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643